DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.03/2025 |
| Deposition of witness | : | P.W. 2 |
| Name | : | மணிமாலா |
| Father’s /Husband Name | : | சங்கரன் |
| Village | : | அட்டமங்கலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 48 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day of May 2025.
A1, A2 Present. A3 produced from Judicial custody.

**முதல் விசாரணை:-**

நான் அட்டமங்கலம் குடியானத் தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1 நாகவள்ளியை எனக்கு தெரியும். அவரது மகள் யோகப்பிரியாவை விழுப்புரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். தற்போது அவரது மகள் திருச்சியில் குடியிருந்து வருகிறார். கடந்த 17.09.2023 தேதி அட்டமங்கலம் குடியானத்தெருவில் உள்ள அ.சா.1 தனது வீட்டை திருச்சியில் உள்ள அவரது மகளளை பார்ப்பதற்காக சென்றிருந்தார். 24 ம் தேதியன்று காலை சுமார் 05.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டை பின்பக்க கதவை பார்த்த போது திறந்து கிடந்தது. நான் உடனே நாகவள்ளிக்கு போன்மூலம் தகவல் சொன்னேன். அ.சா.1 நாகவள்ளி திருச்சியில் இருந்து புறப்பட்டு ஊருக்கு வந்து வீட்டில் பார்த்த போது பீரோவில் இருந்த துணிமணிகள் அலங்கோலமாக இருந்தது. பொருட்கள் எதுவும் திருட்டு போகவில்லை என்று கூறினார். இது சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரில் குடவாசல் போலீசார் வந்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் குருவி குரூப் தான் அ.சா.1 ன் வீட்டுக்கதவை உடைத்து திருட முயற்சித்துள்ளார்கள் என்று தெரிவித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று வீட்டுக் கதவு உடைக்கப்பட்டதை பார்த்த உடனேயே அ.சா.1 க்கு தகவல் தெரிவித்தேனா என்றால் நான் பார்த்த உடன் தகவல் தெரிவித்தேன். யார் வீட்டுக்கதவை உடைத்தார்கள் என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.சம்பவத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.இவ்வழக்கு

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.05.06 03:26:52 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal